**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S. No. 105/2006**

Deposition of **PW.1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tr. G. Mahavishnu, Gr. III Bench Clerk of this court, on 22.10.2025 in accordance with the provision of Act 1 of 1873.

Name : சக்திவேல் Father's Name : ஆறுமுகம்

துவக்க நேரம்: 01.25 P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

1. எனது தகப்பனார் கடந்த 1994-ம் ஆண்டு வா.த.சா.ஆ.1-ன் மூலம் தாவா சொத்துக்களை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். மேற்படி கிரைய ஆவணத்தின்படி ச.எண்.67/3-ல் உள்ள கிணற்றின்மூலம் மேற்படி ஆவணத்தில் உள்ள மற்ற நிலங்களுக்கு தண்ணீர் பாய்ச்சி வந்தார் என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.1-ல் கிரையம் பெற்ற நிலங்களுக்கு உண்டான வாய்க்கால், வழி வரப்பு பாத்தியம், சகல மாமூல் வழிநடை பாத்தியமும் ஆகியவைகள் உண்டு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. எனது தகப்பனார் கிரையம் வாங்குவதற்கு முன்பு, எனது தகப்பனாருக்கு கிரையம் செய்து கொடுத்த அப்பாவு உடையார் என்பவரும் மேற்கண்ட விவரத்தில்தான் எனது அப்பா கிரையம் பெற்ற சொத்துக்களை அனுபவம் செய்து வந்தார் என்றால் சரிதான். வ.சா.ஆ.1-ல் கண்ட சொத்துக்களுக்கு ச.எண்.67/3-ல் உள்ள கிணற்றின்மூலம்தான் தண்ணீர் பாய்ச்சி வருகிறோம் என்றாலும் தற்பொழுது வழக்கிற்காக இல்லை என கூறுகிறேன் என்றால் சரியல்ல.

3. வா.த.சா.ஆ.1-ன் கண்ட சொத்துக்களில் நான் இதுநாள்வரை விவசாயம் செய்து வருகிறேன் என்றால் சரிதான். வா.த.சா.ஆ.12-ஆன பாகபாத்திய விடுதலைப்பத்திரத்தில் கண்ட சொத்துக்களுக்கு ச.எண்.67/3-ல் உள்ள கிணற்றின்மூலம்தான் தண்ணீர் பாய்ச்ச உரிமை உள்ளதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் மேற்படி பத்திரத்தில் கண்ட சொத்துக்களுக்கு வாய்க்கால் மற்றும் வழிநடை பாத்தியமும் உண்டு என காட்டப்பட்டுள்ளது என்றால் பத்திரத்தில் அவ்வாறு காட்டப்பட்டுள்ளது. அந்த பத்திரத்தில் கண்டவாறுதான் பிரதிவாதியின் தகப்பனார் அவருக்கு ஒதுக்கப்பட்ட பாகத்தை அனுபவம் செய்து வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

4. நான் எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட விவசாய நிலத்தில்தான் நான் குடியிருந்து வருகிறேன் என்றால் இல்லை, எனது தாயாருக்கு பாத்தியப்பட்ட சொத்தில்தான் குடியிருந்து வருகிறேன். மேற்கண்ட நிலங்கள் அருகருகே உள்ளது என்றால் சரிதான். எத்தனை ஆண்டுகளாக நான் மேற்கண்ட நிலத்தில் குடியிருந்து வருகிறேன் என்றால் சுமார் 25 ஆண்டுகளாக குடியிருந்து வருகிறேன். பிரதிவாதி அவரது நிலத்தை எந்த வகையில் அனுபவம் செய்து வருகிறேன் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் எனது நிலத்தை நான் அனுபவம் செய்து வருவது மட்டும்தான் எனக்கு தெரியும், பிரதிவாதியின் அனுபவம் பற்றி எனக்கு தெரியாது.

5. ச.எண்.67/3-ல் உள்ள கிணற்றில் பாகம் உள்ளதா என்றால் உள்ளது. அதேபோல் பிரதிவாதிக்கும் பாகம் உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி தனது நிலத்தை எந்த வகையில் அனுபவம் செய்து வருகிறார் என்ற விவரம் தெரிந்திருந்தும் தற்பொழுது வழக்கிற்காக தெரியாது என சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.3-ல் எனது தகப்பனார் கிரையம் பெற்ற சொத்துக்களுக்கு மாமூல் வழிநடை மற்றும் ஏரிமுறை

தண்ணீர் பாயும் வழிநடை வாய்க்கால் பாத்தியம் உண்டு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6. வா.த.சா.ஆ.3-ன்படி ச.எண்.61/3, ச.எண்.61/4 -ல் உள்ள சொத்துக்களானது ச.எண்.60/6, 60/7-ல் உள்ள நிலங்களுக்கு கிழக்கில் அமைந்துள்ளது என்றால் சரியல்ல, ச.எண்.60/1B-ல் உள்ள நிலத்திற்கு கிழக்கில்தான் உள்ளது. வா.த.சா.ஆ.4-ன்படி எனது தகப்பானார் அம்மணியம்மாளிடமிருந்து எந்த நிலத்தை கிரையம் வாங்கினார் என்றால் ச.எண்.59/2, 60/1A, 60/2 மற்றும் 60/3-ல் உள்ள கிணற்றுபாகம் ஆகிய இடங்களை கிரையம் வாங்கினார். மேற்படி பத்திரத்தில் அதில் உள்ள சொத்துக்களுக்குண்டான வாய்க்கால் , வழிநடை பாத்தியம் உண்டு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

7. தற்பொழுது என்னிடம் காட்டப்படும் கடந்த 12.07.1976 தேதியிட்ட கிரைய பத்திரம் எனது தகப்பனாருக்கு கிரையம் செய்து கொடுத்த அம்மணியம்மாள் கிரையம் பெற்ற ஆவணம் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் **<u>பி.வா.த.சா.ஆ.2-</u>**ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி பத்திரத்தில் கண்ட சொத்துக்களுக்கு வழிநடை மற்றும் வாய்க்கால் பாத்தியம் உண்டு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது பாட்டியின் பெயர் தெய்வாணையம்மாள் என்றால் சரிதான். கடந்த 04.06.1979-ல் தெய்வாணையம்மாள் ச.எண்.60/5, 60/3 மற்றும் 59/3 ஆகிய சர்வே எண்ணில் உள்ள சொத்துக்களை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் **<u>பி.வா.த.சா.ஆ.3-</u>**ஆக குறியீடு செய்யப்படுகிறது. (இந்த ஆவணம் வழக்கிற்கு தொடர்பில்லாத ஆவணம் என்பதால் வாதி தரப்பில் மேற்கண்ட ஆவணத்தை குறியீடு செய்ய ஆட்சேபனை செய்யப்பட்டது). மேற்கண்ட ஆவணத்தில் உள்ள சொத்துக்களுக்கு மாமூல் வழிநடை, கல்லேரி, ஆயக்கட்டு தண்ணீர் பாயும் வாய்க்கால் பாத்தியம் உண்டு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

8. ச.எண். 60/5, 60/3 உள்ள சொத்துக்களுக்கு கிழபுறத்தில் சர்வே எண்கள் 60/7A, 60/7B, 60/6A, 60/6B உள்ள நிலங்கள் உள்ளது என்றால் சரிதான். வா.த.சா.ஆ.1 முதல் 4 வரையான ஆவணங்களில் கண்டுள்ள சொத்துக்கள் அனைத்தும் தாவா சொத்தாக காட்டப்பட்டுள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்தான வா.த.சா.ஆ.1 முதல் 4 வரை உள்ள ஆவணங்களில் கண்டுள்ள சொத்துக்களை பத்திரத்தில் கண்டுள்ளவாறு அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரிதான். அதேபோல்தான் பிரதிவாதியும் அவரது தகப்பானாருக்கு ஒதுக்கப்பட்ட பாகத்தினை அவர் அனுபவம் செய்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

9. ச.எண்.60/8-ல் உள்ள வாய்க்கால் எந்த திசையில் செல்கிறது என்றால் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சென்றது, ஆனால் தற்பொழுது அந்த வாய்க்கால் அழிக்கப்பட்டு தார்சாலை அமைக்கப்பட்டுள்ளது. அவ்வாறு தார் சாலை போடப்பட்டதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் அரசு ஆவணமான அ பதிவேட்டில் ச.எண்.60/8 என்பது வாய்க்கால் என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

முடிவு நேரம்: 02.16 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him /her to be correct

Sd/- D. Jansi Rani,
Principal District Munsif (FAC), Attur.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.105/2006, Dt.22.10.2025.